**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேவகோட்டை**

**O.S.No.** 51/2019

| | | |
|---|---|---|
| வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி | : | வா.சா.1 |
| பெயர் | : | ஜெகன் ஜான் வில்லியம் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | ஜெயசீலன் |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |

2025ஆம் ஆண்டு ஜுன் மாதம் 17ம் நாள் செவ்வாய்கிழமை 1872 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி பெஞ்ச் கிளார்க் திரு.மா.ஆ.மணியரசன் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கின் வாதியின் பவர் ஏஜெண்ட் ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை எழுத்துமூலமாக நிருபணவாக்கு மூலத்தின் பேரில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது.

1. 30.04.2009ம் தேதிய பிரதிவாதி வாதிக்கு எழுதிக் கொடுத்த இனாம் செட்டில்மெண்ட பத்திரம் அசல் **வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 13.08.2009ம் தேதிய தாவாச் சொத்திற்கு வாதி பெயரில் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு அசல் **வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. தாவாச் சொத்திற்கான 10(1) கணினி நகல் **வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. தாவாச் சொத்திற்கான வீட்டு வரி ரசீது(1) அசல் **வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. 21.07.2017ம் தேதிய பிரதிவாதி வாதிக்கு காளையார்கோவில் சார் பதிவாளர் அலுவலகத்தில் எழுதிக் கொடுத்த இனாம் செட்டில்மெண்ட ரத்து பத்திரம் (ஆவண எண்.2224/2014) சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. 24.06.2019ம் தேதிய வாதி சிவகங்கை மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த மனு நகல் **வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. 20.07.2021ம் தேதிய காளையார்கோவில் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 2464/2021 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**வாதி தரப்பு முதல் விசாரணையின் தொடர்ச்சி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**